1969 மார்ச் 24]

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : நமக்கு இப்பொழுது அரிசி கிடைப்பதுதான் முக்கியம். சப்ஸிடியைவிட.

திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இந்தியாவிலேயே கோதுமை சாப்பிடுகிறவர்கள், அரிசி சாப்பிடுகிறவர்கள் என்று இரண்டு வகைதான் உண்டு. கோதுமை சாப்பிடுபவர்களுக்கு மட்டும் மத்திய சர்க்கார் ஏற்கனவே சப்ஸிடி கொடுத்திருக்கிறது. இப்பொழுது நிறுத்திவிட்டது. இப்படிக் கொடுத்த வரைக்கும் எவ்வளவு தொகை கோதுமைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கணக்குப் பார்த்து, அந்தத் தொகையை அரிசி சாப்பிடுபவர்களுக்கு மத்திய சர்க்கார் நியாயமாக நடந்து கொள்பவர்களாய், பாரபட்சம் இல்லாதவர்களாய் இருந்தால், கொடுக்க வேண்டும். இப்பொழுது நிலைமை இன்னும் கொஞ்சம் மோசமாக இருக்கிற காரணத்தினுல், மீண்டும் இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி, கோதுமைக்குக் கொடுத்த பழைய தொகையைக் கணக்கிட்டு, அதற்கு ஈடாக அரிசிக்கு சப்ஸிடி வாங்க முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே அவர்கள் கோதுமைக்குக் கொடுத்து வந்ததைப்போல அரிசிக்கும் கொடுக்க வேண்டும் என்று அவ்வப்பொழுது வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். சந்தர்ப்பம் வரும்பொழுதெல்லாம் வற்புறுத்திக்கொண்டு தான் வருகிறோம். முன்னாள் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திற்கு அரிசிக்கு சப்ஸிடி கொடுக்க வேண்டும் என்ற நிலையை திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாமும் அதைத் தொடர்ந்து வற்புறுத்தத் தயங்கமாட்டோம். ஏற்கெனவே அவர்கள் கொடுக்கவில்லை என்றாலும் கூட, இப்பொழுது கொடுத்தால் தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. ப. மகாதேவன் : வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய கோதுமைக்கும், இந்தியாவிலே உற்பத்தியாகக்கூடிய கோதுமைக்கும் உள்ள விலை வித்தியாசத்தைச் சரிபடுத்துவதற்குத் தான் சப்ஸிடி என்று கொடுத்தார்கள் என்று நான் சொல்கிறேன். அது சரிதானு ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : மத்திய சர்க்காருக்கு மெம்பர் அவர்கள் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறார்கள். அப்படியானல் இப்பொழுது மத்திய சர்க்கார் அதை நிறுத்தி விட்டது. அதை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்கள் நமக்குக் கொடுக்கவில்லை. ஏதோ ஒரு காரணம் காட்டுவதற்காக அப்படிச் சொல்கிறார்கள். அந்தச் சமாதானத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. நமக்கு இருக்கிற நிலைமையில் நாம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு வருகிறோம். மத்திய அரசு இதை ஒரு சாக்காகச் சொல்கிறார்கள். அவர்கள் இந்தத் தொகையை சப்ஸிடியாகக் கொடுத்தால் நமக்கு உதவியாக அமையும். ஆகவே, அங்கத்தினர் அவர்கள் இப்பொழுது தமிழகத்தின் நிலைமையைக் கருதி, இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்காமல் இருப்பது நலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்]

(2) நடைமுறைக் கேள்வி.

“ வக்காலத்து ” என்ற சொல்லை அமைச்சர் பயன்படுத்தியது குறித்து

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார். நண்பர் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்பொழுது வெளி நாட்டிலிருந்து வருகிற கோதுமைக்கும், இந்தியாவில் உற்பத்தியாகிற கோதுமைக்கும் விலையில் வித்தியாசம் இருப்பதால், அந்த ஏற்றத் தாழ்வை சரிக்கட்டுவதற்கு சப்ஸிடி கொடுத்தார்கள் என்பது சரிதானு

என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது உறுப்பினர் வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அவரவர்களுடைய கொள்கையைப்பற்றிப் பேசுவதற்கும், தங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டால் அதைப்பற்றி கேட்பதற்கும் உரிமை இருக்கிறது. சட்ட மன்றத்தில் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசினார் என்று சொல்வது சரியா? நீதிமன்றத்தில் தான் வக்காலத்து முறை என்று இருக்கிறதே தவிர, சட்டமன்றத்தில் வக்காலத்து முறை இருக்கிறதா? வக்காலத்து வாங்கிப் பேசுகிறார் என்று சொல்வது தாங்கள் இந்தச் சபையில் அனுமதிக்கப்படுகிற வார்த்தை என்று கருதுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு தேவையில்லாத பாயின்டு ஆப் ஆர்டர்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. Usually lawyers are the only class of people that are entitled to file 'vakalats' and argue in a Court of law on behalf of another, viz., their client. But here, in this House, we are not functioning as lawyers. We are all members duly elected by the people. We are not expected to file 'vakalats' here and argue on behalf of Government of India. Such being the case, is not the Hon. Minister lowering the reputation and dignity of the House when he goes to the extent of saying that we have taken vakalats from the Government of India.?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. மார்டின் அவர்கள் எழுப்பிய பாயின்டு ஆஃப் ஆர்டரில் பொருள் இல்லை என்று நான் குறிப்பிட்டு விட்டேன். அப்படிச் சொன்னதில் ஒன்றும் தவறில்லை. அவர் பாயின்டு ஆஃப் ஆர்டர் மீது நமது விநாயகம் அவர்கள் இன்னொரு பாயின்டு ஆஃப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. மகாதேவன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : தன்னிலை விளக்கம் பிறகு ஆகட்டும். இப்பொழுது இல்லை.

(3) அறிவிப்பு.

சில அவையுரிமைக் கேள்விகள் ஒற்றிவைப்பு.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் நவசக்தி என்ற பத்திரிகையின்மீது கொடுத்திருந்த உரிமைப் பிரச்னையை இன்று எடுத்துக்கொள்வதாகக் கூறினேன். வேண்டிய தகவல் இன்னும் கிடைக்காத காரணத்தினால் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் " நவமணி " என்ற பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையும் நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் மீது ஒரு உரிமையை மீறிய பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்று இல்லாத காரணத்தினால், அதையும் நான் நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.